அத்துடன் பயங்கரவாதமானது, அதன் பல்வேறு வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் தேசங்கள் என்ற சமுதாயத்தினரின் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தலொன்றாக உள்ளதாதலாலும் மற்றும் இலங்கையையும், அதன் மக்களையும், ஆதனத்தையும், நிகழ்தகு எதிர்காலப் பயங்கரவாதச் செயல்களுக்கெதிராகவும் மற்றும் தொடர்புபட்ட செயல்களுக்கெதிராகவும் பாதுகாப்பது அரசாங்கத்தின் முதன்மைக் கடமையொன்றாக உள்ளதாதலாலும்;

அத்துடன் இலங்கையானது பயங்கரவாதத்தை எதிர்த்தல் தொடர்பான எந்தச் சர்வதேசச் சாசனங்களுக்கு கையொப்பமிடுநரொருவராக வந்துள்ளதோ அந்தச் சர்வதேசச் சாசனங்களுக்கு உள்நாட்டில் சட்டப்பயன் கொடுப்பதற்கான சட்டங்களை இயற்றுவதற்கு இலங்கையானது கடப்பாட்டின்கீழுள்ளதாதலாலும்;

அத்துடன் இலங்கை அரசாங்கமானது, பயங்கரவாதம் என்ற கொடூர நிலைக்கெதிராக வேறு இறைமைகொண்ட நாடுகளையும் அவற்றின் மக்களையும் பாதுகாப்பதற்கு உறுதிபூண்டுள்ளதாதலாலும்;

அத்துடன் இலங்கையானது, சர்வதேசத் தரநெறிகளினதும் நியமங்களினதும் உள்நாட்டுத் தேவைகளினதும் அடிப்படையில், பயங்கரவாதத்துக்கெதிராகக் குற்றவியல் நீதியை நிருவகிப்பதற்கான பயனுறு முறைமையொன்றை வலுவுக்கிடுவதனூடாக உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும் தடுப்பதற்கும் ஈடுபாடுகொண்டுள்ளதாகவும் விரும்புகின்றதாகவும் உள்ளதாதலாலும்;

அத்துடன் இலங்கை அரசாங்கமானது, பயங்கரவாதத்துக்கெதிரான குற்றவியல் நீதியை நிருவகிப்பதற்கான முறைமையை நீதியாகவும் நியாயமாகவும் ஏற்புடையதாக்குவதற்கான தேவைக்குக் கவனஞ்செலுத்துகின்றதாதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*1*. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

## பாகம் I

### சட்டத்தின் ஏற்புடைமையும் தவறுகளும்

*2*. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவோருக்கும் பின்வருவனவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்:- சட்டத்தின் ஏற்புடைமை.

(அ) இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லது ஆள்புலத்துக்கு வெளியே, இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற இலங்கையின் எவரேனும் பிரசை;

(ஆ) (i) இலங்கையில் முழுமையாக அல்லது பகுதியளவில்;

(ii) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது அவற்றின்மீது;

(iii) இலங்கையின் வான்வெளியில்;

(iv) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அல்லது இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதனால் பயன்படுத்தப்பட்ட ஒரு வானூர்தியின் மீது அல்லது கலத்தின் மீது அல்லது அது தொடர்பில்;

(v) இலங்கையின் ஒரு தூதுக்குழுவின் அல்லது இலங்கையின் ஒரு தூதரக பதவி அல்லது அலுவலரின் அலுவலக வளவுகளினுள் முழுமையாக அல்லது பகுதியளவில் அல்லது அத்தகைய தூதுக்குழுவின் அல்லது தூதரக பதவியின் அல்லது எவரேனும் தலைவரின் வதிவிடத்தில் அல்லது அத்தகைய குழுவின் அல்லது பதவியின் எவரேனும் தூதலுவலரின் அல்லது வேறெவரேனும் ஊழியரின் வதிவிடத்தில்;

(vi) இலங்கை அரசாங்கத்தின் நியதிச்சட்டமுறையான சபையொன்றின் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள அலுவலக வளவுகளினுள் அல்லது அத்தகைய நியதிச்சட்டமுறையான சபையின் ஊழியரொருவரின் வதிவிடத்தினுள் முழுமையாக அல்லது பகுதியளவில்,

இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள்-

(இ) (i) ஒரு சர்வதேச சமாதானம் பேணுகின்ற அல்லது கண்காணிக்கின்ற தூதுக்குழுவில் பிரித்தமர்த்தப்பட்டவொரு பிரசை உட்பட, இலங்கைப் பிரசையொருவர்;

(ii) இலங்கை அரசாங்கத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஆதனமொன்று,

தொடர்பில் இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லது ஆள்புலத்துக்கு வெளியே இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள்-

(ஈ) இலங்கைப் பிரசையொருவராக இருந்துள்ளவரும், இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லது ஆள்புலத்துக்கு வெளியே இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றவருமான எவரேனுமாள்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் அவரது வழமையான வதிவிடத்தைத் தொடர்ந்து இலங்கையில் கொண்டிருந்தால் மட்டுமே அவர் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வலுவுறுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், அவர் தமது வழமையான வதிவிடத்தை இலங்கையில் கொண்டிராதிருப்பின், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அவர் எந்த வெளிநாட்டரசின் பிரசையொருவராக உள்ளாரோ அந்த வெளிநாட்டரசின் ஒருப்பாட்டுடன் வலுவுறுத்தப்படலாம்; அத்துடன்

பயங்கரவாதம் என்ற தவறுக்கான தண்டம்.

**4.** (1) (அ) இறப்பை ஏற்படுத்தும் உட்கருத்துடன் 3 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவரும், அத்தகைய தவறைப் புரியும்போது வேறெவரே னுமாளின் இறப்பை விளைவிக்கின்றவருமான எவரேனுமாள், மேல்நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஆயுட்கால மறியற் றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) 3 ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற வரும், எந்தத் தவறைப் புரிதலின் நியாயமான எதிர்நோக்கத்தக்க விளைவானது வேறெவரேனு மாளின் இறப்பாகவுள்ளதோ அத்தகைய அந்தத் தவறைப் புரியும்போது வேறெவரேனுமாளின் இறப்பை விளைவிக்கின்றவருமான எவரேனு மாள், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல் ஆயுட்கால மறியற்றண்டனை வரை நீடிக்கக்கூடிய காலப்பகுதிக்கு மறியற்றண் டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுகள் தவிர்ந்த வேறு தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் இருபதாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத வொரு குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஆளுக்கு விதிக்கப்பட்ட வேறேதேனும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக அத்தகைய ஆளின் ஆதனம் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் குடியரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடலாம்.

பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு எத்தனிப்பதற்கான தண்டம்.

**5**. (1) மூன்றாம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற, உடந்தையளிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற எவரேனுமாள் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பதினைந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்று புரியப்பட்டதன் விளைவாகப் பயங்கரவாதம் என்ற தவறு புரியப்படின், தவறாளர் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிந்துள்ளார் என்றாற்போன்று அதே தண்டத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகள்.

**6**. (அ) 7 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாதச் செயலொன்றை; அல்லது

(ஆ) 8 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படும் பயங்கரவாதத்துடன் இணைந்த தீவிரப்படுத்தும் குற்றவியற் செயலொன்றை; அல்லது

(இ) 9 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படும் பயங்கரவாதத்துடன் இணைந்த செயல்களை; அல்லது

(ஈ) 10 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பயங்கரவாதத்துக்கு உடந்தையளித்தற் செயல்களை,

இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பைப் பங்கமானமுறையில் பாதிக்கின்ற, அல்லது ஒரு மக்கள்தொகையை அச்சுறுத்துகின்ற அல்லது பயங்கரவாதத்துக்குட்படுத்துகின்ற உட்கருத்துடன் அல்லது அவ்வாறு அறிந்துகொண்டு அல்லது அத்தகைய நடத்தை அவ்வாறான பயனைக்கொண்டுள்ளதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருந்து, கூட்டாக அல்லது தனித்தனியாகப் புரிகின்ற எவரேனுமாள் அல்லது ஒரு பொது நோக்கத்தின்கீழ் செயலாற்றுகின்ற ஆட்டொகுதியின் உறுப்பினரொருவர் அல்லது தடைசெய்யப்பட்ட பயங்கரவாதி ஒழுங்கமைப்பொன்றின் உறுப்பினரொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

அல்லது ஏதேனும் உயிரியல், இரசாயன, மின்சார அல்லது இலத்திரனியல் அல்லது அணு ஆயுதம் என்பவற்றைச் சட்டமுறையான அதிகாரமின்றி இறக்குமதிசெய்தல், ஏற்றுமதிசெய்தல், உற்பத்தி செய்தல், சேகரித்தல், பெற்றுக்கொள்ளுதல், வழங்குதல், விலைப்படுத்தல், உடைமையில் வைத்திருத்தல் அல்லது பயன்டுத்துதல்.

*பயங்கரவாதத்துடன் இணைந்த தீவிரப்படுத்தப்பட்ட குற்றவியற் செயல்கள்.*

**8.** ஆறாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான தவறொன்றாக அமைகின்ற செயல்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) தண்டனைச் சட்டக்கோவையின் பின்வரும் தவறுகளைப் புரிதல்:-

(i) 114 ஆம் பிரிவின்கீழும் 116 முதல் 126 வரையிலான பிரிவுகளின்கீழும் தண்டிக்கப்படற்பாலதும் அரசுக்கெதிரானதுமானவொரு தவறு;

(ii) 128 முதல் 137 வரையிலான பிரிவுகளின்கீழ் தண்டிக்கப்படற்பாலதும் தரைப்படை, கடற்படை மற்றும் வான்படை தொடர்பானதுமானவொரு தவறு;

(iii) 360இ என்னும் பிரிவின்கீழ் மனித விலைப்படுத்தல் என்ற தவறு;

(ஆ) 2000 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, பணயம் எடுத்தற் தடைச் சட்டத்தின்கீழானவொரு தவறைப் புரிதல்;

(இ) 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிதல்;

(ஈ) 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிதல்;

(உ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிதல்;

(ஊ) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்துக்குட்பட நிரற்படுத்தப்பட்ட பிணையங்களில் வியாபாரஞ்செய்தல் தொடர்பாக ஏதேனும் தவறைப் புரிதல்;

(எ) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறைப் புரிதல்;

(ஏ) (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிதல்.

பயங்கரவாதத் துடன் இணைந்த செயல்கள்.

**9**. ஆறாம் பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழான தவறொன்றாக அமைகின்ற செயல்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) இலங்கைக் குடியரசின் ஆள்புலத்துக்கு வெளியே, இச்சட்டத்தின்கீழானவொரு தவறைப் புரிவதற்காக ஒழுங்குசெய்வதற்கான, அதன் தயார்நிலையான அல்லது அதற்கான ஏதேனும் திட்டத்துக்குப் பயன்கொடுப்பதற்கான ஏதேனும் செயலைப் புரிதல்;

(ஆ) 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின்கீழ் தடைசெய்யப்படுகின்ற தடைசெய்யப்பட்ட பயங்கரவாதி ஒழுங்கமைப் பொன்றின் ஒரு தலைவராக, உறுப்பினராக அல்லது பணிநிலையாளராகப் பணியாற்றுதல் அல்லது சேவையாற்றுதல் அல்லது தடைசெய்யப்பட்ட பயங்கரவாதி ஒழுங்கமைப்பின் உறுப்பினரொருவராக அல்லது பணிநிலையாளரொருவராக இருப்பதற்கு ஆட்களை ஆட்சேர்த்தல்.

ஆளுக்கு உதவுவதற்கு வேறுவகையாகப் பணத்தை அல்லது ஏதேனும் ஆதனத்தை அல்லது வேறு பொருளைப் பெற்றுக்கொள்ளுதல்;

(ஊ) தடைசெய்யப்பட்ட பயங்கரவாதி ஒழுங்கமைப்பொன்றைச் சேர்வதற்கு அல்லது ஒரு பயங்கரவாதச் செயலை அல்லது இச்சட்டத்தின் கீழான வேறேதேனும் தவறைப் புரிவதற்குச் சிறுவர்களை ஆட்சேர்த்தல், தெரிவுசெய்தல், செயற்றூண்டுதல், தூண்டுதல், வலோத்காரம் செய்தல், அவர்களுக்கு உபதேசித்தல் அல்லது பயிற்சியளித்தல்;

(ஊ) ஏதேனும் பணம், ஆதனம் அல்லது பொருள் அல்லது அதன் பெறுமதி இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படலாமென்பதை அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருந்து அத்தகைய பணத்தை, ஆதனத்தை அல்லது பொருளைத் தடைசெய்யப்பட்டவொரு பயங்கரவாதி ஒழுங்கமைப்புக்கு அல்லது எவரேனுமாளுக்கு வலிந்துதவுதல்;

(எ) இச்சட்டத்தின்கீழான பயங்கரவாதம் என்ற தவறு அல்லது வேறு தவறு புரியப்படுவதனைச் செயற்றூண்டும் மற்றும் அத்தகைய தவறு புரியப்படுமென்ற அச்சத்தை விளைவிக்கும் உட்கருத்தைக்கொண்டு, அத்தகைய நடத்தை அத்தகைய தவறை வெளிப்படையாக ஆதரிப்பதில்லையென்பது எவ்வாறிருப்பினும், வேண்டுமென்றும் சட்டமுறையற்றவகையிலும் ஏதேனும் தகவலைப் பொதுமக்களுக்கு விநியோகித்தல் அல்லது வேறுவகையாகக் கிடைக்கச்செய்தல்;

(ஏ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப்புரியும் நோக்கத்துக்காகத் தடைசெய்யப்பட்டவொரு பயங்கரவாதி ஒழுங்கமைப்புக்குத் தன்னிச்சையாகவும் வேண்டுமென்றும் சேவைகளை வழங்குதல்;

(க) பந்திகள் (ஏ), (ஐ) அல்லது (ஒ) இன்கீழான தவறொன்றை வேறெவரேனும் ஆள் புரிவதனை ஊக்குவிக்கும், வலுக்கட்டாயப்படுத்தும் அல்லது செயற்றூண்டும் நோக்கத்துக்காக அத்தகைய வேறு ஆளுக்கு ஏதேனும் அவாநிறைவை, தூண்டுதலை, அச்சுறுத்தலை, வலோத்காரத்தை அல்லது வேறேதேனும் வடிவத்திலான செல்வாக்கை வழங்குதல் அல்லது அத்தகைய வேறு ஆள் பந்திகள் (ஏ), (ஐ) அல்லது (ஒ) இன் நியதிகளின்படி தவறொன்றைப் புரிந்துள்ளமையின் பிரதிபயனாக அவாநிறைவொன்றை வழங்குதல்.

6 ஆம் பிரிவின் கீழான தவறுக்கான தண்டம்.

**11.** (அ) வேறெவரேனும் ஆளின் இறப்பை விளைவிக்கும் உட்கருத்துடன் 6 ஆம் பிரிவின் கீழான தவறொன்றைப் புரிகின்றவரும், அத்தகைய தவறைப் புரியும்போது அவரின் இறப்பை விளைவிக்கின்றவருமான எவரேனுமாள், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஆயுள் மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) 6 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்றவரும் எந்தத் தவறின் நியாயமான எதிர்நோக்கக்கூடிய விளைவு வேறெவரேனும் ஆளின் இறப்பாகவுள்ளதோ அந்தத் தவறைப் புரியும்போது வேறெவரேனும் ஆளின் இறப்பை விளைவிக்கின்றவருமான எவரேனுமாள், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஆயுள் மறியற்றண்டனைவரை நீடிக்கக்கூடிய காலப்பகுதியொன்றுக்கு மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அவர் ஆளாதலும் வேண்டும்; அல்லது

(இ) பந்தி (அ) அல்லது (ஆ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறொன்றல்லாததும் 6 ஆம் பிரிவின்கீழானதுமான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள்,

மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பதினைந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*6 ஆம் பிரிவின்கீழான தவறைப் புரிவதற்கு எத்தனித்தல் முதலியவற்றுக்கான தண்டம்.*

***12.*** ஆறாம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற, உடந்தையளிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற எவரேனுமாள், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் 11 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட இயைபான தண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

*தகவல் வழங்கத் தவறுதல் தவறொன்றாதல்.*

***13.*** (அ) (i) வேறு எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார்; அல்லது

(ii) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்குத் தயாராகின்றார், எத்தனிக்கின்றார், உடந்தையளிக்கின்றார் அல்லது சதிசெய்கின்றார்,

என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்குக் காரணங்களைக் கொண்டிருந்து மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிக்கைசெய்யத் தவறுகின்ற; அல்லது

(ஆ) பயங்கரவாதம் என்ற தவறை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த தவறொன்றைப் புரிந்துள்ளாரெனத் தாம் அறிந்துள்ள எவரேனுமாள் எங்குள்ளார் என்பது தொடர்பான ஏதேனும் தகவலைத் தனதுடைமையில் கொண்டிருந்து, அவரை விசாரிக்கின்ற பொலிசு அலுவலரொருவருக்கு அத்தகைய தகவலை வழங்கத் தவறுகின்ற அல்லது பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவலை வழங்குகின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*சட்டமுறையான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமை தவறொன்றாதல்.*

**14.** (அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட சட்டமுறையான பணிப்புரையை அல்லது கட்டளையை மீறுகின்ற அல்லது அதற்கு முரணாகச் செயலாற்றுகின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட பணிப்புக்கு இணங்கியொழுகுவதற்கு வேண்டுமென்று தவறுகின்ற அல்லது அசட்டை செய்கின்ற; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றை நடாத்துகின்ற பொலிசு அலுவலரொருவரினால் அவரிடம் கேட்கப்பட்டவொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தகவல் வழங்கத் தவறுகின்ற அல்லது பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவலை வழங்குகின்ற; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட சட்டமுறையான கட்டளையின் அல்லது பணிப்புரையின் நடைமுறைப்படுத்துகையை வேண்டுமென்று தடுக்கின்ற அல்லது தடங்கல் செய்கின்ற; அல்லது

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை வலுவுறுத்துவதனைத் தடுக்கின்ற அல்லது அதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**17**. எவரேனும் பொலிசு அலுவலர், ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலர் அல்லது உறுப்பினர் ஒருவர் அல்லது கரையோரக் காவல் அலுவலரொருவர்,- *பொலிசு அலுவலரொருவரினாலும் ஏனைய அலுவலர்களினாலும் கைது செய்யப்படுதல்.*

(அ) இச்சட்டத்தின் கீழான தவறொன்றை அவரது முன்னிலையில் புரிகின்ற எவரேனுமாளை அல்லது புரிந்துள்ளார் என நம்புவதற்கு அவர் நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள எவரேனுமாளை; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ள எவரேனுமாளை; அல்லது

(இ) எந்த ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார் அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று நம்பத்தக்கதென அவர் நம்புகின்ற தகவலை அல்லது முறைப்பாடொன்றைப் பெறுகின்றாரோ அந்த எவரேனுமாளை; அல்லது

(ஈ) கைதுசெய்தலைத் தட்டிக்கழிக்கும் உட்கருத்துடன் இலங்கையிலிருந்து தப்பியோடுகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்தபின்னர் கைதுசெய்தலைத் தட்டிக்கழிக்கின்ற எவரேனுமாளை; அல்லது

(உ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்தமைக்கான சந்தேகநபராகவிருந்துகொண்டு, அத்தகைய ஆள் எந்தப் பிணை நிபந்தனைகளுக்கமைய விடப்பட்டுள்ளாரோ அந்தப் பிணை நிபந்தனைகளை மீறுகின்ற எவரேனுமாளை,

பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம்.

**18**. (1) ஒரு பொலிசு அலுவலர் அல்லாத அலுவலரொருவரினால் கைதுசெய்யப்பட்ட ஆளொருவர், அவசியமற்ற தாமதமின்றியும், எப்பட்சத்திலும் இருபத்திநான்கு மணித்தியாலங்களை விஞ்சாதவொரு காலப்பகுதியினுள்ளும், மிக்க *ஒரு பொலிசு அலுவலர் அல்லாத அலுவலரொருவரினால்*

(4) அத்தகைய ஆணைபெற்ற அலுவலர் அல்லது வேறு அலுவலர், மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அல்லது அதற்கெனப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் பெயர்குறிக்கப் பட்டவொரு பொலிசு அலுவலருக்கு அத்தகைய கைதுசெய்தல் பற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஆளைப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப் பாகவுள்ள அலுவலரின் கட்டுக்காப்பினுள் எடுக்கும் நேரத்தில், கைதுசெய்தலை நிறைவேற்றிய அலுவலர், அவரினால் நிறைவேற் றப்பட்ட கைதுசெய்தல் தொடர்பான சூழ்நிலைகளை எடுத்துக் கூறி அத்தகைய பொறுப்பாகவுள்ள அலுவலருக்குக் கூற் றொன்றை அளித்தல் வேண்டும்.

(6) அத்தகைய அலுவலர், சந்தேகநபரின் உடைமையில் காணப் பட்டிருக்கக்கூடிய அல்லது கைதுசெய்யப்பட்ட இடத்தில் காணப் பட்டிருக்கக்கூடிய எல்லாப் பொருட்களையும் அத்தகைய பொறுப்பாகவுள்ள அலுவலரிடம் கையளித்தலும் வேண்டும்.

கைதுசெய்தலானது ஒரு பொலிசு அலுவலரினால் நிறைவேற்றப் படும் போதான நடவடிக்கை முறை.

**19.** (1) (அ) ஒரு பொலிசு அலுவலரினால் கைதுசெய்யப்பட்ட எவரேனுமாள், அவசியமற்ற தாமதமின்றி, அத்தகைய பொலிசு அலுவலர் எந்தப் பொலிசு நிலையத்தைச் சேர்ந்தவராக வுள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின்முன் நிறுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய முன்னிறுத்துகை செயல்முறைக்கு உகந்த தல்லாததாக இருக்குமிடத்து, கைதுசெய்யப்பட்ட ஆள் மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின்முன் நிறுத்தப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஒரு கைதுசெய்தலை நிறைவேற்றுவதற்கு அல்லது கைதுசெய்யப்பட்ட ஆளை ஒரு பொலிசு நிலையத்திற்குக் கொண்டுசெல்வதற்கான அத்தகைய உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவரின் அல்லது கரையோரக் காவல் அலுவல ரொருவரின் உதவியைப் பெற்றுக்கொள்வது பொலிசு அலுவல ரொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) ஏதேனும் சரீர தீங்கிலிருந்து கைதுசெய்யப்பட்ட ஆளொருவரைப் பாதுகாப்பதற்குச் செயல்முறைக்குகந்த ஒவ்வொரு வழிமுறையும் எடுக்கப்படுதல் வேண்டும்.

நிறுத்துவதற்கும் தேடுகையிடுவதற்குமான தத்துவம்.

**20.** (1) பிரிவு 18 இன்கீழ் அல்லது பிரிவு 19 இன்கீழ் எவரேனுமாளைக் கைதுசெய்வதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் “கைதுசெய்யும் அலுவலர்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பொலிசு அலுவலரொருவர், ஏதேனும் ஆயுதந்தாங்கிய படையின் உறுப்பினரொருவர் அல்லது கரையோரக் காவல் அலுவலரொருவர், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட, அவரிடமிருந்து அல்லது அதிலிருந்து பெறப்பட்ட, அவருடன் அல்லது அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதனைப் புரிவதில் சம்பந்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படுகின்றவராக அல்லது பயன்படுத்தப்படுகின்றதாக, அவரிடமிருந்து அல்லது அதிலிருந்து பெறப்பட்டதாக, அவருடன் அல்லது அதனுடன் தொடர்புபட்டதாக அல்லது அதனைப் புரிவதில் சம்பந்தப்பட்டவராக அல்லது சம்பந்தப்பட்டதாக நியாயமானமுறையில் சந்தேகிக்கப்பட்ட —

(அ) எவரேனுமாளை, ஏதேனும் வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை அல்லது வானூர்தியை நிறுத்திச் சோதனையிடலாம்;

(ஆ) எவரேனுமாளை விசாரிக்கலாம்;

(இ) எவையேனும் வளவுகளினுள் அல்லது ஏதேனும் காணியினுள் பிரவேசித்து அதனைத் தேடுகையிடலாம்;

(ஈ) ஏதேனும் ஆவணத்தை, பருப்பொருளை அல்லது பொருளைக் கட்டுக்காப்பினுள் எடுக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழான தத்துவங்களைப் பிரயோகித்தலானது, 25 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இயைபான திறத்தவர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) கைது செய்யப்படும் நேரத்தில் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு சந்தேகநபருக்குத் தகவலை அறிவிப்பது செயல்முறைக்குகந்ததல்லாததாகவிருக்குமிடத்து, அவருக்கு விளங்குகின்றவொரு மொழியில் அத்தகைய தகவல் செயல் முறைக்குகந்தவரை விரைவாக அவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

அந்தரங்கத் தன்மைக்கு உரிய கவனஞ் செலுத்தி கைதுசெய்தல் நிறைவேற்றப் படுதல்.

**22.** கைதுசெய்யப்படுகின்ற ஆளின் அந்தரங்கத்தன்மைக்கு முறையான கவனஞ்செலுத்தி எல்லாக் கைதுசெய்தல்களும் நிறைவேற்றப்படுதல் வேண்டும். ஒரு பெண் சந்தேகநபரைக் கைதுசெய்தல் ஒரு பெண் கைதுசெய்யும் அலுவலரினால், அல்லது அத்தகைய பெண் அலுவலரின் முன்னிலையில் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு இயன்ற வழிமுறை ஒவ்வொன்றும் எடுக்கப்படுதல் வேண்டும்.

பெண்களைத் தேடுகையிடுதலும் விசாரித்தலும்.

**23.** (1) எவரேனும் பெண்ணை விசாரித்தல் ஆனது கைது செய்யும் பெண் அலுவலரினால் அல்லது பெண் அலுவலர் ஒருவர் முன்னிலையில் நிறைவேற்றப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்கு சாத்தியமான ஒவ்வொரு வழிமுறையும் எடுக்கப்படுதல் வேண்டும்.

(2) பெண்ணை தேடுகையிடுதலானது அவசியமான முறையில் பெண் அலுவலர் ஒருவரினால் மட்டும் நடாத்தப்படுதல் வேண்டும்.

சந்தேகநபரின் மருத்துவப் பரிசோதனை.

**24.** (1) எந்தப் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் தடுத்து வைக்கப்படுகின்றாரோ அந்த பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அல்லது அத்தகைய பொறுப்பாகவுள்ள அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர் புலப்படக்கூடிய ஏதேனும் ஊறு கொண்டுள்ளாரா என பார்ப்பதற்கு அவரை பரிசோதனை செய்தல் வேண்டும்.

(2) சந்தேகநபர் புலப்படக்கூடியதான ஏதேனும் ஊறுபாட்டைக் கொண்டிருப்பின், பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், அத்தகைய ஆளை சட்ட மருத்துவ அலுவலர் ஒருவ

ரால் அல்லது அரசாங்க சட்ட மருத்துவ நிபுணர் ஒருவரால் பரிசோதிக்கப்படுவதற்கும் அத்துடன் அறிக்கை ஒன்றைப்பெறுவதற்கும் செய்வித்தல் வேண்டும்.

(3) மருத்துவச் சிகிச்சைக்கான காரணம் இருந்தாலொழிய, சட்ட மருத்துவ அலுவலர் அல்லது அரசாங்க சட்ட மருத்துவ நிபுணர் தாமதம் எதுவும் இன்றி சந்தேகநபரை பொலிஸ் கட்டுக்காப்பிற்கு திரும்ப அனுப்புதல் வேண்டும்.

கைது செய்தலை அறிவித்தல்.

**25.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்கின்ற எவரேனும் கைதுசெய்யும் அலுவலர், சந்தேகநபரின் இரத்த உறவினர் அல்லது குடும்பத்தின் வயதுவந்த உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யும் நேரத்தில் சமூகமாயிருப்பின், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்ட வடிவத்தில் அத்தகைய சந்தேகநபரை கைதுசெய்தல், கைதுசெய்தலை ஒப்புக்கொள்ளுதல் மற்றும் அது தொடர்பான கட்டுக்காப்பு என்பவற்றிலிருந்து செயல்முறைக்கு உகந்தவரை விரைவாகவும் இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்கு குறையாமலும் அத்தகைய ஆளிற்கு வழங்குதல் வேண்டும்.

(2) அத்தகைய ஒப்புக்கொள்ளல் ஆனது பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(அ) கைதுசெய்யும் தேதி, நேரம், இடம்;

(ஆ) கைதுசெய்வதற்கான காரணங்கள்;

(இ) கட்டுக்காப்பு அல்லது தடுத்து வைக்கும் இடம்;

(ஈ) கைதுசெய்யும் அலுவலரின் பெயர், அடையாளம் காணல் இலக்கம் மற்றும் அவரது பதவிவரிசை; அத்துடன்

(உ) புலனாய்வுகளை நடாத்துவதற்கு பங்கமின்றி அவரை நியாயமானமுறையில் அணுகுவதற்கு சந்தேகநபரின் இரத்த உறவினருக்கு அவசியமாக இருக்கக்கூடிய வாறான வேறு ஏதேனும் தகவல்.

(3) அத்தகைய ஆளொருவர் சமூகமளிக்காவிடின், கைது செய்யும் அலுவலர், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒப்புக்கொள்ளல் எவ்வாளிற்கு சேர்ப்பிக்கப்படல் வேண்டுமோ அவ்வாளின் ஆள் அடையாளம் மற்றும் அவரின் இடம் என்பவற்றை சந்தேக நபரிடம் விசாரணை செய்தல் வேண்டும், அத்துடன் சந்தேக நபர் அத்தகைய தகவலை வழங்கியிருப்பின் அத்தகைய ஆள் பற்றிய ஒப்புக் கொள்ளலை சேர்ப்பிப்பதற்கு சாத்தியமான ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்கப்படல் வேண்டும். சொல்லப்பட்ட ஒப்புக்கொள்ளலின் பிரதியொன்று சந்தேகநபர் மீது சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) எந்தப் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் தடுத்து வைக்கப்படுகின்றாரோ அந்தபொலிஸ் நிலையத்திற்குப் பொறுப் பாகவுள்ள அலுவலர், கைது செய்யப்படுகின்ற அத்தகைய ஆளை இயன்றவரை விரைவாகவும், ஏதேனும் பட்சத்தில் இருபத்தி நான்கு மணித்தியாலத்திற்குப் பிந்தாமலும் பொருளளவில் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் அத்தகைய கைதுசெய்தல் மற்றும் தடுத்துவைத்தலை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் பொருளளவில் இச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) அத்தகைய அறிவிப்பானது பின்வருவனவற்றை உள்ளடக் குதல் வேண்டும் -

(அ) கைதுசெய்த தேதி, நேரம் இடம்;

(ஆ) கைதுசெய்வதற்கான காரணங்கள்;

(இ) எந்த இடத்தில் சந்தேகநபர் தடுத்து வைக்கப்படு கின்றாரோ அந்த இடம்;

(ஈ) கைதுசெய்யும் அலுவலரின் பெயர்; அடையாளம் காணல் இலக்கம் மற்றும் அவரது பதவிவரிசை;

(உ) சந்தேகநபரை உடனடியாக அணுகுவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவை இயலச் செய்யக்கூடுமான வேறு ஏதேனும் தகவல்;

(ஊ) அத்தகைய கைதுசெய்தலோ மற்றும் தடுத்து வைத்தலோ இயைபான ஆளின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளது என்று தீர்மானிப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வேறு ஏதேனும் தகவலை கோரலாம்.

மத்திய தரவுத்தளமும் பதிவேடும்.

**26.** (1) பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி ஆனவர் ஒரு மத்திய தரவுத் தளத்தையும் பதிவேட்டையும் தாபித்து பராமரித்தல் வேண்டும். இத் தரவுத்தளமானது இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்தல், தடுத்துவைத்தல், விளக்கமறியலில் வைத்தல், பிணை வழங்குதல், விடுவித்தல், குற்றவழக்கு தொடுத்தல், குற்றத் தீர்ப்பளித்தல் அல்லது விடுதலை செய்தல் என்பன தொடர்பாகவும் கைதுசெய்யப்பட்ட ஆட்களுக்கு தண்டனை வழங்குதல் என்பன தொடர்பாகவும் தகவல்களைக் கொண்டிருக்கும்.

(2) அத்தகைய தரவுத்தளம் மற்றும் பதிவேடானது பின்வருவனவற்றைத் தீர்மானிப்பதற்கு தேவைப்படும் அத்தகைய வேறு தகவலை உள்ளடக்குதலும் வேண்டும்–

(அ) கைது செய்தலின், கட்டுக்காப்பில் வைத்தலின் மற்றும் தடுத்துவைத்தலின் சட்டமுறையான தன்மை;

(ஆ) சந்தேகநபரின் சுதந்திரத்தை தடுத்தலின் சட்டமுறையான தன்மை;

(இ) தொடர்ச்சியாக தடுத்துவைத்தல் அல்லது விளக்கமறியலில் வைத்தல் என்பவற்றுக்கான தேவை.

(3) பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி மனித உரிமைகள் ஆணைக்குழு அவ்வாறு வேண்டுகோள்விடுக்கும் இடமெல்லாம் அவ்வாணைக் குழுவிற்கு அத்தகைய தரவுத்தளம் மற்றும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட தகவலை வழங்குதல் வேண்டும்.

நீதிவானொருவர் தடுத்துவைக்கும் இடத்தை பார்வையிடல்.

**32.** (1) எந் நீதிவானுக்கு முன்னர் சந்தேகநபர் தடுத்துவைத்தல் கட்டளை ஒன்றின் அதிகாரத்தின்கீழ் முன்நிறுத்தப்பட்டுள்ளாரோ அத்துடன் தடுத்துவைக்கப்பட்டுள்ளாரோ அந்த நீதிவான் அத்தகைய தடுத்துவைக்கும் இடத்திற்கு பொறுப்பாகவுள்ள அதிகாரிக்கு ஏதேனும் முன் அறிவித்தலை வழங்காமல் -

(அ) அத்தகைய சந்தேகநபரின் தடுத்துவைக்கும் இடத்தை பார்வையிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சந்தேகநபரை நேர்காணல் செய்தலும் உடல் ஆரோக்கியத்தை கவனித்தலும் வேண்டும்.

(2) நீதிவானுக்கு உடனடியானதும் தடையற்றதுமான அணுக்கத்தை வழங்குதல் தடுத்துவைத்தலுக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

(3) சந்தேகநபர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்திருக்கலாம் என நீதிவான் அவதானித்திருந்தால் அல்லது அவர் சித்திரவதைக்கு ஆளானவர் என சந்தேகநபர் சார்த்தியிருந்தால், நீதிவான் அரசாங்க சட்ட மருத்துவ நிபுணர் ஒருவரால் சந்தேகநபரை பரிசோதிப்பதற்காக முன்னிறுத்துவதற்கும் அவருக்கான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் கட்டளையை ஆக்கலாம்.

(4) சந்தேகநபர் மற்றும் இயைபான பொலிஸ் அலுவலர் அல்லது அலுவலர்கள் விசாரிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிய பின்னர், நீதிவான் சந்தேகநபர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாமென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றது என திருப்திப்பட்டால், அவர் 28 ஆம் பிரிவின் (2), (3), (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி செயலாற்றுதல் வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு தடுத்து வைத்தலை அறிவித்தல்.

**33.** (1) சந்தேகநபர் ஒருவர் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், செயல்முறைக்கு உகந்தவரை விரைவாக ஆனால் தடுத்துவைத்தல் தொடங்கியதிலிருந்து எழுபத்தியிரண்டு மணித்தியாலங்களுக்கு பிந்தாத ஏதேனும் பட்சத்தில் அத்தகைய தடுத்துவைத்தல் பற்றி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும்.

(6) (அ) நீதிவான் தடுத்துவைத்தல் கட்டளையின் நீடிப்பினை வழங்க மறுக்கின்றவிடத்து, அவர் சந்தேகநபரை விளக்கமறியலில் வைப்பதற்கான ஏதேனும் நியாயமான காரணம் உள்ளதா என விசாரணை செய்தல் வேண்டும்.

(ஆ) விசாரணையின் பின்னர், நீதிவான் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றை சந்தேகநபர் புரிந்துள்ளார் என நம்புவதற்கு ஏதேனும் நியாயமான ஏதுக்கள் உள்ளது என அபிப்பிராயப் படின், சந்தேகநபர் விளக்க மறியல் கட்டுக்காப்பில் இடப்படுதல் வேண்டும்.

(இ) சந்தேகநபர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளார் என நம்புவதற்கு காரணங்கள் எதுவும் இல்லாதவிடத்து, அவர் தடுத்துவைத்தலில் இருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் கீழானவழக்கு நடவடிக்கைகள் இரகசியமாக நடாத்தப்படுதல் வேண்டும்.

*தடுத்து வைத்தல் கட்டளைகளின் கீழான ஆகக்கூடிய தடுத்து வைத்தல் காலப்பகுதி.*

**37.** சந்தேகநபர் எவரும் 31 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடுத்துவைத்தல் கட்டளைகளின்கீழ் எட்டுவாரங்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கு தடுத்துவைக்கப்படுதல் ஆகாது.

*தடுத்து வைத்தலை நீடிப்பதற்கு எதிராக அல்லது தடுத்து வைத்தல் நீடிப்பை மறுப்பதற்கு எதிரான மேன்முறையீடு.*

**38.** (1) பொலிஸ் அலுவலர் அல்லது சந்தேகநபர் இயைபான நீதிவான் நீதிமன்றத்திற்கு, 36 ஆம் பிரிவின்கீழ் தடுத்துவைத்தல் கட்டளை ஒன்றின் நீடிப்பை வழங்குவதற்கு அல்லது மறுப்பதற்கு எதிரான மேன்முறையீடு ஒன்றை செய்யலாம்.

(2) நீதிவான் பொலிஸ் அலுவலரினால் கோப்பிடப்பட்ட அந்தரங்க அறிக்கை மற்றும் வழக்கு நடவடிக்கைகளின் பதிவு என்பவற்றுடன் சேர்த்து அந்தரங்க உறை ஒன்றில் இயைபான நீதிவான் நீதிமன்றம் அமைந்துள்ள இடப்பிரதேசம் மீதான நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள மேல் நீதிமன்றத்திற்கு அத்தகைய மேன்முறையீட்டை உடனடியாக ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

(அ) சந்தேகநபர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளார் எனவும் அத்துடன் மேலதிக புலனாய்வுகள் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது எனவும் நம்புவதற்கு உறுதியான ஏதுக்கள் உள்ளது எனவும் அல்லது

(ஆ) புலனாய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது எனவும் அத்துடன் சந்தேகநபருக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளை தொடருவதை கவனத்திற்கெடுக்க சட்டத்துறைத் தலைமையதிபதி கோரப்பட்டுள்ளார் அல்லது கோரப்படவுள்ளார் எனவும்,

நீதிவான் விளக்கமறியல் கட்டுக்காப்பில் சந்தேகநபர் தடுத்து வைக்கப்படவேண்டும் எனவும் பணிக்கலாம்.

*பொலிசு அலுவலர் விளக்க மறியலில் உள்ள சந்தேக நபருக்கான அணுக்கத்தைக் கொண்டுள்ளமை.*

**40.** இச்சட்டத்தின்கீழ் புலனாய்வு ஒன்றை நடாத்துகின்ற பொலிசு அலுவலர், நீதிவான் பின்வருமாறு வேறுவகையில் கட்டளையிட்டாலொழிய பின்வருவனவற்றுக்கு உரித்துடைய வராக்கப்படுதல் வேண்டும்-

(அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி விளக்க மறியல் கட்டுக்காப்பில் இடப்பட்டுள்ள சந்தேகநபரொருவருக் கான அணுக்கத்தினைக் கொண்டுள்ளதுடன் சந்தேக நபரை நேர்காணுவதற்கு;

(ஆ) அவர் சார்பில் அத்தகைய நீதிவானுக்கு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நீதிவானால் வழங்கப்பட்ட அனுமதியுடன் அவருடைய கூற்றுக்களை பதிவுசெய்வ தற்கு;

(இ) நீதிவானால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் அதிகாரத்தின்கீழ் மேலதிக புலனாய்வுகளை நடாத்தும் நோக்கத்திற்காக விளக்க மறியலில் இருந்து சந்தேகநபரை விடுவிப்பதற்கு:

ஆயினும் எவ்வாறாயினும், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அலுவலரொருவர் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு தடவையும் சமுகமளித்தல் வேண்டும்.

**41.** (1) முப்பத்தோராம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடுப்புக் கட்டளைக்கெதிரான மேன்முறையீடுகளுக்கான நிருவாக நிவாரணங்களை வழங்குவதற்காக மீளாய்வுச் சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*தடுப்புக் கட்டளை களிலிருந்து நிருவாக நிவராணத் திற்கான மீளாய்வுச் சபை.*

(2) மீளாய்வுச் சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்–

(அ) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பின்வரும் துறைகளில் உயர்தொழில்சார் திறமையும் அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களான ஒவ்வொரு ஆளும் அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஏனைய இரண்டு ஆட்களும்:-

(i) குற்றவியல் புலன்விசாரணையும் குற்றவியல் நீதியும்; அத்துடன்

(ii) மனித உரிமைகள்.

(3) முப்பத்தோராம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடுத்துவைத்தல் கட்டளையின் கீழ் அவரை கைது செய்து தடுத்து வைப்பதற்கு எடுக்கப்பட்ட முடிபினால் இன்னலுற்றவரான எவரேனும் சந்தேகநபர் அல்லது அவர் சார்பிலான அவருடைய சட்டத்தரணி அத்தகைய கட்டளையை மீளாய்வு செய்வதற்கு மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(4) மீளாய்வுச்சபையானது மேன்முறையீட்டில் கூறப்பட்ட ஏதுக்களையும் தடுத்துவைத்தல் கட்டளையை கோரியவரான அலுவலரின் உதவியுடன் இயைபான பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள மற்றும் தடுத்துவைத்தல் கட்டளையை வழங்கி அத்தகைய கட்டளையின் மீது ஆளுகையை செய்தவரான பிரதி பொலிசு தலைமை அதிபதியினால் ஆக்கப்பட்ட சமர்ப்பணங்களின் அடிப்படையின்மீது அத்தகைய கட்டளையை கோருகின்ற காரணங்களையும் கவனத்தில் கொண்டு மேன்முறையீட்டை பரிசீலித்தல் வேண்டும்.

(ஈ) கைது செய்யப்படுவதற்கு முன்னர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்தமை மற்றும் அத்தகைய பொறுப்பிலுள்ள அலுவலர்,

அத்தகைய நிகழ்வுபற்றி அறிந்திருக்கவில்லை என அவர் இயைபான நீதிவானுக்கு அத்தகைய தகவலை அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) நீதிவான் அத்தகைய தகவலை உடனடியாக விசாரணை செய்தல் வேண்டுமென்பதுடன் விசாரணை முடிவில், நீதிவான் பொலிசு நிலையத்துக்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் நல்லெண்ணத்தில் செயற்பட்டிருந்தார் எனத் திருப்திப்படுவாராயின் பொலிசாரினால் செய்யப்பட்ட சந்தேகநபருக்கெதிரான சார்த்தல்கள் நன்றாக கண்டுபிடிக்கப்பட கூடியதாக தோன்றினால் மற்றும் நீதிவான் தடுத்துவைத்தலின்கீழ் சந்தேகநபரை வைத்திருப்பது உசிதமானதென கருதுகின்றவிடத்து, அவர் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தடுப்புக் கட்டளையொன்றின் காண்பிப்பின் மேல், பின்வருவனவற்றுக்காக பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலரை அனுமதிக்கலாம்:-

(அ) சந்தேகநபரை கட்டுக்காப்பில் எடுத்தல்;

(ஆ) விளக்க மறியலிலிருந்து சந்தேகநபரை விடுவித்தல்; அத்துடன்

(இ) அத்தகைய தடுத்துவைத்தல் கட்டளையின் நியதிகளின்படி அத்தகைய சந்தேகநபரை தடுத்து வைப்பதற்கு.

(3) இப்பிரிவின்கீழ் சந்தேக நபரொருவரை தடுத்து வைத்தல் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) நீதிவானால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்று;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்ட சந்தேகநபரொருவருக்காக ஏற்புடையற்பாலதான இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்தாதல்; அத்துடன்

(ii) தவறைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பெற்ற ஆளொருவரின் கூற்றுக்களுட்பட, புலனாய்வின்போது பதிவு செய்யப்பட்ட எல்லாக் கூற்றுக்களும்;

(iii) நிபுணர்களின் அறிக்கைகள், புகைப்படங்கள், உருவரைகள், வரைபடங்கள் முதலியன;

(iv) காலத்துக்காலம் சட்டத்துறைத் தலைமையதி குறித்துரைக்கக்கூடியவாறான வேறேதேனும் விடயப் பொருள்; அத்துடன்

(v) நடாத்தப்பட்ட புலனாய்வு தொடர்பான அறிக்கையொன்று

## பாகம் VI

### குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல்

*சட்டத்துறைத் தலைமையதிபதி வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல்.*

**71.** இச்சட்டத்தின் கீழான தவறொன்றை அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகையில் எவரேனுமாளினால் புரியப்பட்டுள்ள வேறேதேனும் சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனத் தோன்றுகின்ற அத்தகைய ஆளுக்கெதிரான குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைச் சட்டத்துறைத் தலைமையதிபதி தொடுத்தல் வேண்டும்.

*குற்றப்பகர்வை இடைநிறுத்துதலும் பிற்போடுதலும்.*

**72.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்,-

(அ) எவரேனுமாளுக்கு மரணம் அல்லது கடுமையான உடல் ஊறுபாடு விளைவிக்கப்பட்டிராதுள்ளவிடத்து; அல்லது

(ஆ) இலங்கை அரசினதும் மக்களினதும் பாதுகாப்பு பாரதூரமானமுறையில் விட்டுக்கொடுக்கப்பட்டு அல்லது பாதிக்கப்பட்டிராதுள்ளவிடத்து,

(6) ஊரடங்குக் கட்டளையொன்றிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில் விலக்களிக்கப்படுவதற்கு தேவையுடையவராகவுள்ள எவரேனும் ஆள், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் (5) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரசபைக்கு விண்ணப்ப மொன்றைச் செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(7) பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஊரடங்குக் கட்டளையொன்று தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(8) ஊரடங்குக் கட்டளையொன்றை வேண்டுமென்றே மீறும் ஆளொருவர், தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(9) இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான வேறு எல்லா வழிவகைகளும் பயனற்றனவாக எண்பிக்கப்பட்டுள்ள விடத்து, ஊரடங்குக் கட்டளையொன்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவாறான நியாயமான வலோற்காரத்தைப் பயன்படுத்துவது எவரேனும் கைதுசெய்யும் அலுவலருக்கு சட்டமுறைமையானதாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய எவரேனும் அலுவலர் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தினுள் தனிப்பட்ட பாதுகாப்பைப் பிரயோகித்தலின் போதேயொழிய கொல்லுகின்ற வலோற்காரத்தைப் பயன்படுத்துதலாகாது.

தடைசெய்யப்பட்ட இடங்கள்.

**84.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது முறையே தரைப்படை, கடற்படை அல்லது வான்படையின் ஏவுநர் அல்லது கரையோரக் காவல் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விதப்புரையொன்றின்மேல் காலத்திற்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் (இதனகத்துப்பின்னர் "தடைசெய்யப்பட்ட இடம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தடைசெய்யப்பட்ட இடமொன்றாகவிருப்பதற்கு ஏதேனும் பொது இடத்தை அல்லது வேறேதேனும் அமைவிடத்தை விதிக்கலாம்.

(3) அத்தகைய பிரகடனம்-

(அ) இலங்கையின் ஆள்புலத்திற்கு முழுமையாகவா அல்லது இலங்கையின் குறித்தசில குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புகளுக்காகவா தொழிற்படக்கூடியது எனக் குறித்துரைத்தல் வேண்டும்;

(ஆ) பெயர்குறிக்கப்பட்ட பதவி வரிசையில் உள்ள பொலிஸ் அலுவலர்களுக்குச் சமமான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு தத்துவமளிக்கப்பட்ட ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலர்கள் பதவி வரிசையை குறித்துரைத்தல் வேண்டும்.

(4) ஏதேனும் இடப்பரப்பில் பொது ஒழுங்கை பேணும் நோக்கத்துக்காக அழைக்கப்படுகின்ற ஏதேனும் ஆயுதந் தாங்கிய படையின் உறுப்பினர்கள், அத்தகைய நோக்கத்துக்காக குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XI ஆம் அத்தியாயத்தில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள் தவிர இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் பொலிஸ் அலுவலர்கள்மீது அளிக்கப்பட்ட தேடுகையிடல் மற்றும் கைதுசெய்தலுக்கான தத்துவம் உள்ளடங்கலாக தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், பொலிஸ் அலுவலர்கள்மீது அளிக்கப்பட்ட, பொது இடமொன்றில் ஆட்களிடமிருந்து தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்களை கைப்பற்றுதல் மற்றும் அகற்றுதலுக்கான தத்துவம், இலங்கை தரைப்படை அல்லது இலங்கை வான்படையின் சார்ஜன்ட் ஒருவரின் அல்லது இலங்கை கடற்படையின் சிற்றலுவலர் ஒருவரின் பதவிவரிசைக்குக் கீழேயுள்ள, மேற்சொல்லப்பட்டவாறு அழைக்கப்பட்ட ஆயுதந்தாங்கிய படையொன்றின் எவரேனும் உறுப்பினரால் பிரயோகிக்கப்படுதல் ஆகாது.

(5) எந்த இடப்பரப்பு தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிரகடனமொன்று நடைமுறையில் உள்ளதோ, அந்த ஏதேனும் இடப்பரப்பில், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச்சட்டத்தின் 95 ஆம் பிரிவு, அதன்கண் காணப்படுகின்ற “பொலிஸ் அலுவலர்” எனும் சொல்லமைப்பு அத்தகைய பிரகடனம்மூலம் அழைக்கப்படுகின்றவரும் இலங்கை தரைப்படை அல்லது இலங்கை வான்படையின் சார்ஜன்ட் அல்லது இலங்கை கடற்படையின் சிற்றலுவலரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையொன்றில் உள்ளவருமான ஆயுதந்தாங்கிய படைகளின் எவரேனும் உறுப்பினரை உள்ளடக்குகின்றது என்றாற்போன்று பயனுறுதல் வேண்டும்.

(6) கிரமமான படையின் அலுவலர் ஒருவராக அல்லது தரைப்படைவீரர் ஒருவராகவிராத இலங்கை தரைப்படையின் எவரேனும் உறுப்பினர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிரகடன மொன்றின்மூலம் அழைக்கப்படுகின்றவிடத்து, அவர் இராணுவச் சட்டத்தின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் முனைப்பான சேவையின்மீது உள்ளவராக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இராணுவச் சட்டத்திற்கு அமைந்ததான ஆளொருவராகவுமிருத்தலும் வேண்டும்.

(7) கிரமமான கடற்படையின் அலுவலர் ஒருவராக அல்லது கடலோடி ஒருவராகவிராத இலங்கை கடற்படையின் எவரேனும் உறுப்பினர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிரகடனமொன்றின்மூலம் அழைக்கப்படுகின்றவிடத்து, அவர் கடற்படைச் சட்டத்தின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் முனைப்பான சேவையின்மீது உள்ளவராக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், கடற்படைச்சட்டத்திற்கு அமைந்ததான ஆளொருவராகவுமிருத்தலும் வேண்டும்.

(8) கிரமமான வான்படையின் அலுவலர் ஒருவராக அல்லது வான்படை வீரராகவிராத இலங்கை வான்படையின் எவரேனும் உறுப்பினர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிரகடனமொன்றின்மூலம் அழைக்கப்படுகின்றவிடத்து, அவர் வான்படைச்சட்டத்தின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் முனைப்பான சேவையின்மீது உள்ளவராக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்திற்கு அமைந்ததான ஆளொருவராகவுமிருத்தலும் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் உரியமுறையில் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஓர் ஒழுங்குவிதி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*பணிப்புகள்.*

**93.** (1) சனாதிபதி காலத்துக்குக்காலம் அமைச்சரின் விதப்புரையின்மேல், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பணிப்புகளை வழங்கலாம்; அவை, எந்தமுறையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வலுவுக்குட்படுத்தப்படவேண்டுமோ அந்த முறை தொடர்பாக பொலிஸ் அலுவலர்களுக்கும் ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புகள், பயனுள்ள முறையிலும் சட்டத்தால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் தரநெறிகள் மற்றும் நியமங்களுக்கு இணங்கியொழுகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக மட்டுமே இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "சட்டம்" எனும் சொல்லமைப்பு மனித உரிமைகளை ஏற்றங்கீகரிக்கின்றதும் எந்த சர்வதேச சாசனங்களுக்கு இலங்கை கையொப்பமிடுநர் ஒருவராக இருக்கின்றதோ அந்த சர்வதேச சாசனங்களையும் உள்ளடக்குகின்றது.

(4) அத்தகைய ஒவ்வொரு பணிப்பும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்.*

**94.** (1) சனாதிபதி அமைச்சரின் விதப்புரையின்மேல் எந்த ஆட்கள் தொடர்பில் சட்டத்துறை தலைமையதிபதி 72 ஆம் பிரிவின் கீழ் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளை இடைநிறுத்தும்படி மற்றும் பின்போடும்படி விதந்துரைத்துள்ளாரோ அல்லது சட்டத்துறை

